# விடியல்

The Dawn

இதழ்-111, ஜுலை -2018

**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**
கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

**முனைவர் சி.ரா.சுரேஷ்**
தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

**முனைவர் ப.பிரதீபா**
தமிழ் உதவிப்பேராசிரியர்

**ஆசிரியர் குழு**

திருமதி. சு.சாந்தி
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
முனைவர் ந.சங்கீதா
திரு. செ.தங்கராஜ்
முனைவர் சு.முப்பிடாதி
திரு. ந.சரவணன்
திரு ஆ.கௌரிசங்கர்
திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
திரு. ரா.தர்மதுரை
செல்வி. மா.சத்தியப்பிரியா
திருமதி கொ.சத்தியா
திருமதி கா.வெண்ணிலா
முனைவர் ம.சுரேஷ்
திரு க.தனபால்
திருமதி ல.வெண்ணிலா
திரு.வி.சந்திரன்

## மருத்துவர் தினம்

### (ஜுலை -1)

உலகின் உன்னதமான தொழில்களில் தலையாயது மருத்துவத் தொழில். மக்களின் ஆரோக்கியம் மற்றும் உயிர் காப்பவர் மருத்துவர். உலக மக்களை நோயின் கோரப் பிடியிலிருந்து மீட்டெடுப்பது மருத்துவர்களே. நம் வாழ்நாளில் மருத்துவர்களை அணுகாத நபர்களே இருக்க இயலாது. சமூகத்தில் பெருமதிப்புக்கு உரியவர்களாக மருத்துவர்களே திகழ்கின்றனர். சமூகம் பிணியின்றி வாழ தனது ஆரோக்கியத்தையும் பொருட்படுத்தாது உழைப்பவர்களே மருத்துவர்கள். அதனால்தான் அவர்களைச் சிறப்பிக்கும் பொருட்டு ஜுலை முதல் நாள் தேசிய மருத்துவ தினமாகக் கடைபிடிக்கப்படுகிறது

© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

வெளியீடு:

**தமிழ்த்துறை**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA Knowledge is Power

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher

இந்தியாவின் புகழ் பெற்ற மருத்துவராகவும் மேற்கு வங்கத்தின் முதலமைச்சராகவும் விளங்கிய டாக்டர்.பி.சி.ராய் (பிதன் சந்திர ராய்) அவர்களின் பிறந்த தினம் மற்றும் இறந்த தினம் ஜூலை ஒன்று ஆகும். இவர் மருத்துவத் துறையில் பல சாதனைகள் புரிந்ததுடன், தன்னலம் பாராது மருத்துவ சேவை புரிந்தார். இவரது மருத்துவ சேவையைப் பாராட்டும் விதமாக ஜூலை 1-ஆம் நாள் தேசிய மருத்துவர்கள் தினமாக 1991 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்படுகிறது. இந்நாளன்று வருடந்தோறும் மருத்துவத் துறையில் சிறந்த சேவையாற்றும் மருத்துவர்களுக்கு பி.சி.ராய் விருது வழங்கி சிறப்பிக்கிறது இந்திய அரசு.

அதிக மன அழுத்தம், உடல் செயல்பாடுகள் குறைதல், உடற்பயிற்சியின்மை, உடல் பருமன், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், ஒழுங்கற்ற நேரங்களில் உணவு உண்ணுதல் போன்ற பல காரணங்களால் இந்திய மருத்துவர்களின் சராசரி ஆயுள் 55 முதல் 59 ஆண்டுகள் என இந்திய மருத்துவக் கழகத்தின் ஆய்வு (ஐ.எம்.எ) கூறுகிறது. இது சராசரி மக்களின் ஆயுளை விட 10 ஆண்டுகள் குறைவு என்பது கவலையான செய்தி.

சேவையில் முன் மாதிரியாக விளங்கும் மருத்துவத் துறையில் சேவையை மட்டுமே தன் வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்ட மருத்துவர்கள் ஒரு புறம் இருக்க, பொருளாதரத்தை மட்டுமே தன் குறிக்கோளாகக் கொண்டு மக்களின் ஆரோக்கியத்தை கருத்தில் கொள்ளாது தொழில் புரியும் மருத்துவர்களும் இச்சமூகத்தில் உள்ளனர் என்பது வேதனைக்குரிய செய்தியாகும்.

இன்றைய சூழலில் மாதாந்திர வீட்டு பட்ஜெட்டில் மருத்துவச் செலவுக்கென தனித் தொகையை எடுத்து வைக்காத குடும்பங்களே இல்லை எனலாம். மருத்துவத்தில் அதிக மருந்துகள் இருக்கின்றன

எனும் பொய்மையை மக்கள் நம்ப வேண்டியதில்லை. ஒரே மருந்து பல மருந்துக் குழுமங்களால் பல பெயர்களிலும் பல வடிவங்களிலும், நிறங்களிலும் உள்ளது. அவற்றின் குணங்களை அறிந்து கொள்ள வேண்டியது மக்களின் கடமை.

மருத்துவர்கள் நோயாளிக்கு மருந்து பற்றிய பயத்தை ஏற்படுத்தாமலும் பணச்சுமையை ஏற்றாமலும் நோயாளிகளுக்குப் புரியும் வகையில் பிரச்சனைகளை எடுத்துக் கூறி தெளிவுபடுத்த வேண்டுவது அவசியம்.

***நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்***
***வாய்நாடி வாய்ப்பச் சொல்***

எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது மருத்துவர்களின் கடமையாகும். நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளுள் சூழலை தூய்மையாக வைப்பது இன்றியமையாததாகும். அதன் வழி கிடைக்கும் ஆரோக்கியமான, சீரான வாழ்வு குறித்து எடுத்துரைக்க வேண்டுவது அவசியம். அடிப்படைச் சுகாதாரத்தை மக்களுக்குக் கொடுக்க வேண்டியது அனைவரின் கடமை. இன்றைய சமுதாயம் சீரான சுகாதாரத்துடன் இயங்குகிறதா என்பது ஐயமே. மருத்துவ உலகம் மருந்து உற்பத்தி, விற்பனை விளம்பரங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்து சமூகத்தில் சமச்சீரான ஆரோக்கிய வாழ்வுக்கான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவது முக்கிய கடமையாகும். இந்தச் சவாலை முன்னெடுப்பது நம் அனைவரின் கடமையாகும்.

- **இணையாசிரியர்**

*மருத்துவர் தினம்*


***கவிதைகள்…………………. …5 - 19***

***பொது அறிவு வினா- விடை…..20 - 21***

***மனிதநேயம்……………………21 - 23***

***விடுகதைகள்...…………………23 - 24***

***மருத்துவக் குறிப்புகள்……… .24 - 26***

***சிறுகதை………………………26 - 28***

***கவிதைகள்……………………28 - 32***

# கவிதைகள்

## வானவில்

பஞ்சுமேகங்களில்
தோன்றும்
அழகான படைப்பு
எத்தனையோ நிறங்கள்
இருப்பினும் வெறும்
ஏழு நிறங்களைக் கொண்ட
ஓர் அதிசயம்
மனித உணர்வுகளை
வெளிப்படுத்துவதாய்
அமையும்
கருவியும் இதுவே
இதனுள் எத்தனை
வேற்றுமைகள்
இருப்பினும்
ஒன்று சேர்ந்து கோர்த்த
பூவைப் போல
வண்ணமயமான உணர்வு
மனிதனிடம் இருக்கும்
ஒற்றுமையை உணர
இயற்கை தந்த வரம் இது
குளிர்ச்சியான நேரங்களில்

வந்து
மனிதர்களின் கண்களை
குளிரச் செய்வது
வானவில்!
காணாத இமைகளில்
கண் இமைக்காமல்
இரசிக்கும் அழகான
இயற்கை வரம்.

க.ரஞ்சூரியா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## காமராசர்

விருதையில் விதைத்த விதை நீ
விருட்சமாய் மாறி பல வினோதம் செய்தாய்
கடமையில் கண்ணியம்
காட்சிக்குக் காட்சி செயல் வடிவம்
பதவியில் இருந்த போதும்
பணிவின் அடையாளம்
சிறுவயதில் கண்ட சிறுபிரச்சாரத்தால்
சீறி வரும் சிங்கத்தைப் போன்று
வீறு நடை போட்டு வெற்றி கண்டாய்
குடிசைக்கும் கோட்டைக்கும் பாலம் அமைத்த
பணிவாளன் நீர்...
அறிவு என்னும் முத்தைப் பெற
கல்வி என்னும் கடலுக்குள்
அழைத்துச் சென்ற ஆசான்

படித்தவர் பலர் இருக்க
படிக்காமல் தன் பகுத்தறிவால்
சாதனை படைத்த
சாதனையாளன்
இந்த விதை விட்டுச் சென்ற
விதிமுறைகளைப் பின்பற்றுவோம்
நாமும் நம் வாழ்நாளில்!

மு.பாலாஜி
மூன்றாமாண்டு மின்னனுவியல் மற்றும் தொடர்பியல்

## மனித நேயர் காமராஜர்

விடியும் முன்னே பலிக்கிறது
ஏழைகளின் கல்விக் கனவு
கற்கண்டாய் இனிக்கிறது
உன் கல்வித்திட்டம்
ஆரவாரம் கொள்கிறது
மதிய உணவுத் திட்டம்

மக்களுக்கு மகுடம் சூட்டி
படிக்காத மேதையாகி
பண்பாளன் நீ ஆட்சி செலுத்த
எளிமையும் நேர்மையும்
எட்டிப் பார்த்து
உன் தோளில் தொற்றிக் கொண்டது

என் இரு தோளிலும்
உயிர்த் தோழனாய் அமர
நேர்மைக்கும் எளிமைக்கும்
வாய்ப்பு கொடுத்தாய்!

நீ செய்த சாதனைகளால்
உன் உருவச்சிலை
உயிர் பெற்று நிற்கிறது
பட்டி தொட்டி எல்லாம்!

மண்ணில் பிறந்து
மனதை விட்டு நீங்காமல்
சரித்திரம் படைத்த கர்ம வீரரே!
ஏழைகளுக்கு உதவுவதில் நீர் வள்ளலே!

ப.பூங்கொடி

## இயற்கையைப் போற்றுவோம்

போற்றுவோம் இயற்கையை...
போற்றுதல் என்பது சடங்கல்ல...
இயல்பானதொரு பண்பு...
இனிமையானதொரு சுகம்...
நடமாடும் பூமியை...
சுவாசிக்கும் காற்றை...
அருந்தும் நீரை...

காணும் தாவரங்களை...

கடக்கும் உயிரினங்களை...

போற்றிப் பாதுகாப்போம்...

இயற்கையைப் போற்றுவோம்...

இதயபூர்வமாகப் போற்றுவோம்...

வருங்காலத்தினருக்கு வளமிக்க

வாழ்வை வழங்கி மகிழ்வோம்.

ப.பூங்கொடி

## பசுமை

நீல வானம்...

அதில் பூத்திடும்

பகல் இரவு விண்மீன்கள்

பசுமை போர்த்திய மலைகள்

சரிந்து விழுந்த

பள்ளத்தாக்குகள்... சமவெளிகள்...பாலைவனச் சோலைகள்

இங்கு பூத்துக் குலுங்கிடும் சோலைகள், வயல்வெளிகள்

காய்த்திடும் மரங்கள்

கனிதரும் தரு வகைகள்.

காற்றை மயக்கும் நறுமணங்கள்

உயர்வானில் உயர விரிந்திடும் பறவைகள்

ஓடி விளையாடும் உயிரினங்கள்

நுரை பொங்கும் கடல்

அதில் எழுந்திடும் அலைகள்

நீந்திடும் மீன் வகைகள்

விழுந்திடும் அருவி
ஓடிடும் ஆறு
தாகம் தணித்திடும் நீர் நிலைகள்
சுடும் காற்று குளிர் தென்றல் சூறாவளி
அடைமழை மாறிடும் வானிலை
இவை ஒவ்வொன்றின் ஒலியில்
மெல்லிய காற்றில்
ஒலித்திடும் இன்னிசை
அனைத்தும் அற்புதம்
அதில் அன்பு இதயம்
கொண்ட மனிதனின் படைப்பு
ஒரு மகத்துவம் இவ்வுலகம்!!
இங்கு நாம் காணும்
ஒவ்வொன்றும் பிரமிப்பு – அவன்
ஈசன் தன் உயிர் மூச்சில் வரைந்து
வாழ்ந்திடும் உன்னத உயிரோவியம்...

ப.ஜீவிதா
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு.

## தையல் சொல் கேள்

நீரின்றி அமையாது உலகு பெண்ணே – நீ
இன்றி அமையாது உறவு
குடும்பப் பொறுப்பினையும்
உன்னத உறவுகளையும் - நீ
தைப்பதனால் உன்னை

தையல் என்றார்களோ?

ஆணின் அந்தரங்கக்
கசிவுகளை உன்னுள் அடக்கி
ஓர் அற்புத வடிவத்தை
கொடுக்கும் பிரம்மா...
நீ..!

உன்னால்
'உரு' கொண்ட பலர்
உன்னையே
உருவமின்றி சிதைக்கின்றனர்
உன் கருவறை
இருட்டறை என்பதனால்
உலா வருகின்றனர் வஞ்சகர்கள்
வெளிச்சத்தில்...

தாய்க்குப் பின்
தாரம் என்பார்கள்
வெட்கம் கெட்ட
வேறொருவருக்கு விலை பேசும்
சிற்பிகள்...

பாரதி முதல்
பாமரன் வரை
பெண்மையைப் பேசினாலும்
வாய்ச் சொல்லில் வீரனே!

பகுத்தறிவாளனும் - தக்க
சமயத்தில் உன் சொல்லில்
குற்றம் என
நெற்றிக் கண் திறப்பர்.

இதிகாசங்களிலும் புராணங்களிலும்
உன் சொல்
உன் உணர்வைப்
புரிந்ததனால்...
காலங்கள் ஓடினாலும்
கால வெள்ளம் அழிந்தாலும்
களையா அமிழ்தம் என
நினைத்துக் கரை கண்டு
அழியா ஓவியமாய்
நின்றனர்
நிலை பெற்றனர்.

பெண்மை சாபம் அல்ல
வரம்

வரத்தினால் வாழ்வுண்டு
வரலாற்றில் இடமுண்டு

தையல் சொல் கேள்...

முனைவர் கோ.இரவிச்சந்திரன்
தமிழ் இணைப் பேராசிரியர்

## பசுமையைப் போற்றுவோம்

கம்யூட்டர் திரையில் தண்ணீர் இருக்கிறது
அதை வைத்து - எனக்கு
விவசாயம் தான் செய்யத் தெரியல
New India Morden development - இதோ
மண்புழுவிற்கு காங்கிரிட்டில்
நடக்கப் பயிற்சி தருகிறேன்
செடிக்கு இப்பவே
சிமெண்டில் வளரக் கற்றுத் தருகிறேன்.
நெல் மணிகளுக்கு கருவிலே
ஊட்டி வளர்க்கிறேன்
தண்ணீர் இல்லாமல் வளரக் கற்றுக் கொள் என்று.
கிணறுக்கு சமாதி செய்ய
மனமோ மறுக்கிறது
காலம் அதைச் செய்கிறது
தென்னை மரத்து நிழலை மறக்கும்
மனிதனுக்கு
ஏசி காத்தும் இனிப்பாகத்தான் இருக்கும்
பறவைக்கு சிக்னல் போட்டு
நிறுத்தும் விமானத் துறை...
நீர் நிலைக்கு இன்று நீதித்துறை...
பட்டாம் பூச்சிக்கோ
பூச்சிகொல்லி மருந்தில் உணவு
களைக்கொல்லியால்...

மண்ணுக்கு மரணம்
விதைக்க விதையில்லை
கையில் பணம் இல்லை
இது தான் Caseless India- வோ
Online- ல் அறுவடை செய்ய பயிற்சியாம்
விவசாயத் துறை அறிவிப்பு
வடிவேல் சொல்லுவது போல்
நிலத்தை காணோம்
கிணற்றையும் காணோம்
மழையையும் காணோம்
அறுவடை மட்டும் எங்கிருந்து வரும்
கீரைக்கு சமாதி
சிறுதானியங்களுக்கு சிறைச்சாலை
பர்கர் பீசாவுக்கு
எட்டுவழிச் சாலை
கதர் போட்ட தரகரே
உம் உலக மையம், தாராள மையம்
என் நாட்டு பழக்கங்களுக்கு
அழிவு மையம் ஐயா!!
கண்ணாடி போட்டும்
கண்ணு தெரியலையா
குனிந்து வணக்கம் போட்டதால்
எதிர்காலம் தான் தெரியலையா
பூக்கும் சோலையில்
மலர்கள் ஏங்குவதும்
உரசி கொண்டு போகும் தென்றலையும்

மண்ணில் பொன்னாய்
இருக்கும் வளங்களையும்
அழிப்பது உன் உரிமை அன்று
பசுமையைப் போற்றுவோம்.

க.சுரேந்திரன்
நுண்ணுயிரியல் மூன்றாமாண்டு

## உலகோர் குலதெய்வம்

உன் கருவின் கதகதப்பில்
உயிர் கொண்டேன்
எனைப் படைத்த
கடவுள் நீ!

எனக்குப் பாலூட்டிச்
சீராட்டி வளர்த்தாய்
என் தாய் நீ!

என்னோடு
மண்ணில் விளையாடி
அன்பை வளர்த்தாய்
என் சகோதரி நீ!

பதின் பருவ
ஹார்மோனால்
பட்டாம் பூச்சி பறந்த போது

எனக்கு தேவதை நீ!

கல்யாண பந்தத்தில்
வாழ்வோடு கைகோர்த்த
மனைவி நீ!

என் சகியின்
மணி வயிற்றில்
மலர்ந்து சிரித்த போது
எனக்கு தெய்வத் திருமகள் நீ!

சருமம் சருகாகி
உதிரும் இலையான
எனை மடியில் சுமக்கும் போது
மீண்டும் தாயே நீ!

மானுட தேர் ஓட
மறுக்க முடியாத
மலர்ந்த சக்தியே
அச்சாணியே ...
மாகாளி நீ...
பராசக்தி நீ...
உலகோர் குலதெய்வம் - பெண்மையே...

அ.கோகிலா
இளங்கலைத்தமிழ் மூன்றாமாண்டு.

# தாய்மொழி தமிழ்

தமிழை யாரும் வளர்க்கவில்லை
தமிழால் தான் வளர்ந்திருக்கிறார்கள்
வளர்கிறார்கள்
வளர்ந்தவர்கள் மறந்திடலாம் மறைந்திடலாம்
வளர்த்துவிட்ட தமிழ் மறையாது...
ஒவ்வொரு மொழிக்கும் தனிச்சுவையிருக்கும்
இச்சுவையெல்லாம் சேர்ந்தாலே
அங்கு தமிழ் இருக்கும்...
கருவுக்கு உருவம் கொடுத்தது
என் தாய் என்றால்
என் கருத்துக்கு உருவம் கொடுத்தது
என் தமிழ்...
தொல்காப்பியத்தைத் தோளில் சுமந்து
இலக்கணத்தை இசையில் கலந்து
திருக்குறளைத் தீந்தமிழால் திருத்தி
விதையாய் முளைத்து
விண்ணைத் தொட்டு மண்ணில் விழாமல்
விண்ணை முட்டும் முழக்கம் தமிழ்...

கு. மனோஜ்குமார்
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## நம் நாட்டின் இன்றைய நிலை

படைக்கும் தொழிலாளிக்கும்
உழைக்கும் பாமரனுக்கும்
உணவில்லை இத்திருநாட்டில்…
ஒய்யாரமாய் சுழலும்
நாற்காலிக்கும் குலுகுலு இயந்திரத்திற்கும்
இருக்கும் மரியாதை..
நெற்றி வேர்வை நிலத்தில் சிந்தி
உழைக்கும் தொழிலாளிக்கில்லை
நம் தாய்நாட்டில்!

ஜே.பூர்விசா
இளங்கலை உயிர்தொழில்நுட்பவியல்.

## விவசாயம்

நேற்று பெய்த மழையில் முளைத்தவைகள் எல்லாம்
விவசாயத்தை எதிர்த்தன
விவசாயம் என்பது அந்த உழவன்
ஆறு மாதம் படும் வேதனை என்பது
உங்களுக்குத் தெரியுமா?
தண்ணீர் இல்லாமல், மழை இல்லாமல்
அவர்கள் படும் வேதனை தான் தெரியுமா?
ஒன்று மட்டும் தெரிந்து கொள்ளுங்கள்

அவர்கள் இல்லையென்றால்
நமக்கு உண்ண உணவு இல்லை
உணவு இல்லையெனில்
இந்த உலகில்
நானும் இல்லை
நீயும் இல்லை
ஏன் இந்த உலகமும் இல்லை.....

மனோமெல்வின். இ
முதலாண்டு இளம் வணிகவியல்

## பொது அறிவு

1.இந்தியாவின் முதல் சோதனை குழாய் குழந்தை யார்?
விடை:இந்திரா

2.இந்தியாவின் முதல் பெண் விமானி யார்?
விடை:துர்கா பானர்ஜி

3.இந்தியாவின் முதல் திரைப்படம் எது?
விடை:ராஜா ஹரிச்சந்திரா

4.இந்தியாவின் முதல் செய்தித்தாள் எது?
விடை:பெங்கால் கெசட்(ஜனவரி 27இ1780)

5.தமிழ்நாட்டில் உள்ள தாலுக்காக்களின் எண்ணிக்கை என்ன?
விடை: 206

6.மேட்டுர் அணையின் கொள்ளளவு?
விடை:93.50 டி.எம்.சி

7.இரயில் பாதைகள் எத்தனை வகைப்படும்?
விடை:3

8.இந்தியன் இரயில்வேயின் பறக்கும் ராணி யார்?

விடை: மும்பையிலிருந்து சூரத் செல்லும் ரயில்

பவித்ரா.மா

முதலாமாண்டு ஆங்கிலம்

## மனிதநேயம்

மனிதநேயம் என்பது மனிதன் உண்மைக்குக் கட்டுப்பட்டு வாழவேண்டும் என்பதையே எடுத்துரைக்கிறது. மற்றவர்களையும் தம்முள் ஒருவராக எண்ணினால் மனிதநேயம் என்பது அனைவர் மனதிலும் உண்டாகும் மனிதநேயத்தைப் பற்றி பேசும்போது நம் அனைவருக்கும் முதலில் நினைவுக்கு வருபவர் அன்னைத் தெரசா. நாம் சாதாரண மனிதர்களுக்கு ஒருமுறை உதவி செய்யவே தயங்குகிறோம். ஆனால் இவரோ தொழுநோயாளிகளுக்காகவும் ஆதரவற்றவர்களுக்காகவும் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்டவர். இவரோ ஆறறிவு கொண்ட மனிதர்களுக்குதான் உதவி செய்தார். ஆனால் வள்ளலார் எனக் கூறப்படும் இராமலிங்கஅடிகளார் வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'' என ஓரறிவு பயிர்களைப் பார்த்து வாடினார். நம் முன்னோர்களான இவர்களிடையே உள்ள மனிதநேயம் தற்போதைய சமுதாயத்தில் ஒருவருக்கும் கிடையாது. இவர்கள் மட்டுமின்றி படிப்பறிவற்ற காலத்தில் தோன்றி நம் தமிழை உயர்த்தி நிலைநாட்டிய நம் பெரும்புலவர் திருவள்ளுவர் அவருடைய பல குறள்களில் மனிதநேயத்தைப் பற்றிக் கூறியுள்ளார். அது ஒரு புறம் இருந்தாலும் சாதி, மதம், இனம், நாடு என அனைத்தையும் கடந்து நிற்கும் திருக்குறளை இயற்றி இவ்வுலகிற்கு மிகப் பெரிய மனித நேய செயலாகும்.

"வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து"

வறுமையில் வாடுபவர்களுக்குப் பொருள் கொடுத்து உதவுவது மனிதநேயச் செயலாகும். மற்றவர்களுக்கு கொடுப்பதெல்லாம் எதிர்பயனை எதிர்பார்த்து சுயநலத்துடன் செயல்படுவது இறுதியாக இன்றைய சமுதாயத்திற்கு,

"ஒரு கை தட்டினால் ஓசை வராது
பல கை தட்டினால் தான் ஓசை வரும்"

அதைப் போன்று மனிதநேயம் என்பது என்னிடம் மட்டுமோ அல்லது உன்னிடம் மட்டுமோ இருந்தால் போதாது. நம் அனைவரிடமும் மனிதநேயம் இருக்க வேண்டும், ஒற்றுமையுடன் போராடினால் வெற்றி கிடைக்கும்.

"நாளைய சமுதாயம் இன்றைய இளைஞர்கள் கையில்தான்" உள்ளது.

"ஒற்றுமையே வலிமை"

ஆ.சயனநறி
முதலாண்டு இளம் அறிவியல்
உயிரிதொழில்நுட்பவியல், அ பிரிவு

## பொது அறிவு

1. ஏலக்காயில் இருக்கும் எண்ணெயின் பெயர் என்ன?

   விடை: வேலாடைல்

2. ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தில் எத்தனை எழும்புகள் உள்ளன.

   விடை: ஏழு

3. பிறக்கும் போது குழந்தைகளுக்கு எத்தனை எலும்புகள் இருக்கும்?

விடை: 330

4. உலகில் பூக்கள் உற்பத்தியில் முதல் இடம் வகிக்கும் நாடு எது?

விடை: நெதர்லாந்து

5. ருத்ராட்சம் எத்தனை வகைப்படும்?

விடை: 38

6. 138 கிரிக்கெட் வரலாற்றில் முதன் முறையாக பகலிரவு டெஸ்ட் போட்டி நடைபெற்ற இடம் எது?

விடை: அடிலெய்டு, ஆஸ்திரேலியா

7. உலகிலேயே மிகப்பெரிய கோப்பை எந்த விளையாட்டிற்கு வழங்கப்படுகிறது.

விடை: போலோ

8. இந்தியா, பங்களாதேஸ், சீனா இடையே ஓடும் நதி எது?

விடை: பிரம்மபுத்திரா

9. உலகில் தாய் மொழி இல்லாத நாடு எது?

விடை: சுவிட்சர்லாந்து

10. முதன் முதலில் அனு உலையை உருவாக்கிய நாடு எது?

விடை: ரஷ்யா

ஆ.குணசேகர்

இளங்கலைத் தமிழ், மூன்றாம் ஆண்டு

## *விடுகதைகள்*

1. மண்ணுக்குள்ளே கிடப்பான் மங்களகரமானவன் அவன் யார்?

விடை: மஞ்சள்

2. கொம்பு நிறைய கம்பு அது என்ன?

விடை: மாதுளம்பழம்

3. ஆடும் வரை ஆட்டம், ஆடிய பின் ஓட்டம் அது என்ன?

விடை: இதயம்

4. கடல் நீரில் வளர்ந்து மழை நீரில் மடிவது என்ன?

விடை : உப்பு

5. எங்க அக்கா சிவப்பு குளித்தால் கருப்பு அது என்ன?

விடை: அடுப்புக்கரி

6. இடி இடிக்கும் மின்னல் மின்னும் மழை பெய்யாது அது என்ன?

விடை: பட்டாசு

7. உடல் சிவப்பு வாய் அகலம் உணவு காகிதம் நான் யார்?

விடை: அஞ்சல் பெட்டி

வி.ஈஸ்வர்
முதலாமாண்டு பி.சி.ஏ – அ பிரிவு

## *மருத்துவக் குறிப்புகள்*

- வெற்றிலைச் சாறு எடுத்து தொடர்ந்த அருந்தி வந்தால் நுரையீரல் பலப்படும்.
- கீழாநெல்லி,கரிசலாங்கன்னி சேர்த்து 48 நாட்கள் சாப்பிட கல்லீரல் குறை நீங்கும்.
- விளாமரத்தின் பூக்களை கொதிக்க வைத்து குடிக்க எலிக்கடியின் விஷம் முறியும்.
- இரத்த அழுத்தம் உள்ளவர்கள் மாம்பழம் சாப்பிட நல்ல பலன் கிடைக்கும்.
- காசநோய் உள்ளவர்கள் தினமும் அரநெல்லிக்காய்

சாப்பிடவும்.

- சிறுபசலைக் கீரை சாப்பிட்டு வர மலத்தை இளக்கி வெளியேற்றும். உடல் சூடு தணியும்.
- பொன்னாங்கன்னி கீரை கண் சம்பந்தமான நோய்களுக்கு அருமருந்தாகும்.
- யானைக்கால் நோய்க்கு வல்லாரை கீரை தொடர்ந்து சாப்பிட்டு வர குணமாகும்.
- மதிய உணவில் தயிர் சேர்த்து சாப்பிட இரத்தக்குழாயில் ஏற்படும் அடைப்பு நீங்கும்.
- பூண்டு, கருப்பட்டி சேர்த்து சாப்பிட்டு வந்தால் இடுப்புவலி குணமாகும்.
- முடக்கத்தான் இலையை சீரகம் சேர்த்து க'ாயம் செய்து குடிக்க உடல்வலி நீங்கும்.
- வில்வ இலையை காய்ச்சி குடித்தால் காய்ச்சல் குணமாகும்.
- எலுமிச்சை பழச்சாறு தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் மலேரியா குணமாகும்.
- துளசிச்சாறு, இஞ்சி சமஅளவு கலந்து குடிக்க ஜலதோசம் நீங்கும்.
- அகத்தி கீரையை வாரம் 2 முறை சாப்பிட்டு வர இரத்தக் கொதிப்பு வராது.
- மூலத்திற்கு பருப்புடன், துத்தி இலையையும் வேகவைத்து சாப்பிட வேண்டும்.
- அத்திபழம் தேனில் ஊறவைத்து சாப்பிட்டு வர வயிற்றுவலி குறையும்.

- மூச்சு வாங்கும் தொந்தரவு தீர தூதுவளை தொடர்ந்து சாப்பிட்டு வர பூரண குணமாகும்.
- வில்வபழம் சாப்பிட மூளை தொடர்பான நோய்கள் குணமாகும்.
- அத்திகாயை பகல் பொழுதில் உட்கொண்டால் உதடு வெடிப்பு குணமாகும்.
- அகத்திக்கீரை வயிற்றுப்புழுக்களை அழிக்கும் நல்ல மருந்தாகும்.
- கோவைப்பழம் தொடர்ந்து சாப்பிட்டு வர சர்க்கரை நோய் சரியாகும்.
- விளாம்பழம் தினசரி ஒன்று சாப்பிட்டால் புற்றுநோய் குணமாகும்.
- நெல்லிக்காய் சாறுடன் தேன் கலந்து சாப்பிட்டால் விக்கல் நிற்கும்.

அ.திவ்யா
இளம் அறிவியல் இரண்டாமாண்டு நுண்ணுயிரியல்

## *சிறுகதை* - முடிவில்லாத தொடர்கதை

### முன்கதைச் சுருக்கம்

ஓர் ஊரில் அரசர் ஒருவர் இருந்தார். அவர் யார் முடிவில்லாத கதையைக் கூறுகிறாரோ அவருக்கு அரசாட்சியை கொடுப்பதாக அறிவித்தார். எவராலும் முடிவில்லாத கதை கூற முடியவில்லை. பின்னர் ஒரு பெண் கதை கூற முன்வந்தார்.

அவள் கதை கூற அரண்மனைக்குச் செல்லும் வழியில் ஒரு குருவியின் செயலைக் கண்டு கதை கிடைத்தது என்று நினைத்துக் கொண்டு அரண்மனை நோக்கிச் சென்றாள் அவள்.

**கதையின் தொடர்ச்சி**

அரண்மனையை அடைந்த அவள் காவலர்களிடம் கூறி நான் கதை கூற வந்துள்ளேன். எனவே என்னை உள்ளே அனுமதியுங்கள் என வேண்டினாள். அரண்மனைக்கு உள்ளே சென்ற பிறகு அரசரை வணங்கி தான் வந்த நோக்கத்தையும் கூறி முடிவில்லா கதை கூற ஆரம்பித்தாள்.

ஒரு ஊரில் அரசர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தன்னுடைய உணவு தானியக் கிடங்கிலே பல்வேறு நெல் மூட்டைகளை அடுக்கி வைத்துள்ளார். அந்த கிடங்கிலே ஒரு சிறிய ஓட்டை ஒன்று மேற்புறம் உள்ளது. அந்த சமயம் ஒரு சிட்டுக்குருவி பசியைப் போக்க உணவு தேடிக்கொண்டிருந்தது. அப்பொழுது குருவியின் கண்ணில் இந்த களஞ்சியத்தில் உள்ள ஓட்டை தென்பட்டது. ஓட்டையின் வழியே நெல் இருப்பது தெரிந்தது.

பின்னர் அந்த குருவி முதல் நாள் ஒரு நெல்லை எடுத்துச் சென்றது. 2-ம் நாள் இரண்டு நெல்லை எடுத்துச் சென்றது. 3-ம் நாள் மூன்று நெல் எடுத்துச் சென்றது. இவ்வாறாக ஒவ்வொரு நாளும் வந்து நெல் எடுத்துச் சென்றது என திரும்பத் திரும்ப அதையே சொன்னாள் அப்பெண். அரசர் அடுத்து என்ன நடந்தது என கேட்க அடுத்த நாளும் நெல் எடுத்துச் சென்றது என்று கூற சலிப்படைந்த மன்னர் தான் கூறியபடி அந்தப் பெண்மணிக்கு பரிசும் ராஜ்ஜியத்தையும் தந்தார்.

### கதையின் கருத்து

இக்கதையின் மூலம் உலகில் முடிவில்லாத செயல்கள் உண்டு என்பதையும் இயற்கையே நம் அனைவருக்கும் முதல் மற்றும் சிறந்த ஆசான் ஆகும். இயற்கையை முன் மாதிரியாக வைத்துத்தான் உலகில் அனைத்துச் செயல்களும் நடைபெறுகின்றன.

கு. மனோஜ்குமார்
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு.

## அன்பின் அழுகை

என் இதயத்தின் அழுகுரல் யார்
காதுகளிலும் கேட்கப் போவதில்லை
நொறுங்கிய இதயத்தின் விரிசலின்
வழியாக உருகிக்கொண்டிருக்கிறது
என் உயிர்..
நீ சுவாசிக்கும் காற்றோடு
கலந்துவிடும் முன்பு வந்துவிடு
நீ விட்டுச் சென்ற அதே பாதையில்
அற்ப நம்பிக்கையுடன் காத்திருக்கிறேன்
கண்ணீர் துளிகளுடன்.

அன்பரசன்
முதலாமாண்டு ஆங்கிலம்

## உறவுகள்

அப்பா உயிர்த் துளி கொடுத்து
அம்மா உயிரைச் சுமந்து

தொப்புள் கொடியில் உயிர் வளர்ந்து
பத்து மாதம் கருவறை இருட்டில்
மூச்சுப் பயிற்சி கண்டு
பூமியின் வெளிச்சத்தில்
வந்து விழும் குழந்தை
வித்தியாசமான உருவம் கொண்டு
வேற்றுமையான எண்ணம் கொண்டு
மனிதாபிமான குணம் கொண்டு
ஆண்டவனின் விருப்ப நிறம் கொண்டு
வளர்ந்து வாழ்ந்து
நல்லதும் கண்டு
கெட்டதும் கண்டு
சுகமும் கண்டு
அவமானமும் கண்டு
ஒவ்வொருவரும் ஒவ்வொரு
வித்தியாசமான அனுபவம் கண்டு
இதுதான் உலகம்
இதுதான் வாழ்க்கை
இது தான் பாதை
இது தான் பயணம் என்று தெளிவதற்குள்ளே
விதி சதி செய்து
இயற்கை மாற்றம் கொண்டு
உடலை வளர்த்து
அறிவை வளர்த்து
நட்பை வளர்த்து
எதிர்ப்பை வளர்த்து

கோழையை எதிர்த்து

வீரத்தை வளர்த்து

படிப்பைக் கண்டோம்

தினமும் பிடித்த உணவு உண்டோம்

வேலை கொண்டோம்

உழைப்பு கொண்டோம்

பணம் கண்டோம்

ஆணவம் கொண்டோம்

அறியாமை கொண்டோம்

திவ்ய பாரதி

இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## அம்மா

எத்தனை உறவுகள்

அகிலத்தில் இருந்தாலும்

காலத்தின் மோதலினால்

அவை மாறுபடும்...

தாயே!

உன் சுவாசம் மட்டும் போதும்

என்னை இந்நிலம்

வாழ்த்தி வரும்!!!

சு.பிரபா

பி.ஏ ஆங்கிலம்

## அம்மா

நான் எழுதும் கவிதை
பேனா முனையில் இருந்து
வரும் வர்ணங்கள் அல்ல
என் இதய துடிப்பில் இருந்து
வரும் சத்தங்கள்
தாமரை இருப்பது தண்ணீரில்
என் உயிர் பிரிவது
என் அன்னையின் கண்ணீரில்
சூரிய உதயத்தின் முன்
என் கண் முன் தோன்றிய
முதல் நிலவு என் அம்மா!
ரோஜா வாடினால் தண்ணீர் விடுவேன்
என் உள்ளம் வாடினால் கண்ணீர் விடுவேன்
என் கண்கள் மூடும் பொழுதும்
விழிக்கும் பொழுதும் நான் காண
விரும்புவது என் அம்மாவின் சிரித்த முகத்தையே

ப.கிருட்டிணமூர்த்தி,
பிஎஸ்.சி. டி.எப்.டி முதலாமாண்டு

## அன்பு

நமக்காகக் காத்திருக்கும் அன்பும்
நம்மை காக்க வைக்கும் அன்பும்
என்றும் உண்மையானது

நிலையான அன்பிற்கு பிரிவில்லை!
சொல்லாத சொல்லுக்கு அர்த்தமில்லை
தேடும் பாசத்திற்கு தோல்வி இல்லை
உண்மையான அன்பிற்கு என்றும் மரணமில்லை

ப.கிருட்டிணமூர்த்தி,
பிஎஸ்.சி. டி.எப்.டி முதலாமாண்டு

## இயற்கை

கல்லுக்குள் ஈரம்
அருவியாய்க் கசிய
கல்லுக்குள் மரமும்
தென்றலாய் பேச
இயற்கையும்
காதல் கடிதம் எழுதியது
பச்சை நிறத்தில் !
மலையின் புரட்சி
தண்ணீரின் வீழ்ச்சி
இயற்கை செய்யும் ஆட்சி!!!

எம். மகாலஷ்மி,
பி.எஸ்.சி டி.எப்.டி, முதலாண்டு

## வேளாண்மை

விதைகள் கீழ் நோக்கி
எறியப்பட்டால் தான்
விருட்சங்கள் மேல் நோக்கி

வளரும்....

நினைப்பில் உறுதிகொண்டு முயற்சி

செய்தால்தான்

நம்பிக்கை நம் மனதில்

மலரும்.....

செல்லும் பாதையில் தடைகள்

ஏற்பட்டால்தான்

செல்லும் பாதையானது சரியாக

செல்லும்....

விதையென விழும்போது

நம்பிக்கை சிறியது

பின்பு....,

விருட்சமாய் எழும்போதுதான்

“வெற்றி” கிடைக்கும்

மா.சௌமியா

இரண்டாமாண்டு இளம் அறிவியல்

உயிரிதொழில்நுட்பவியல், ஆ பிரிவு

